DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025ம் ஆண்டு ஜுலை மாதம் வியாழன்கிழமை 31ம் நாள் சாட்சியாகிய ஜார்ஜ் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பெஞ்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜார்ஜ் | வயது | 55 |
| த/பெ. | அருள்தாஸ் | இனம் | ஆண் |
| கிராமம் | பிரம்மபுரம் | தொழில் | பால் வியாபரம் |
| சமயம் | | தாலூக்கா | |

**CC.No.97/2017**

(1 ,3,4 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பாக குவிமுச பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்.)

**முதல்விசாரணை 31.07.2025 அ.சா.6**

1. நான் தற்போது பிரம்மபுரத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 கலைவாணி எனது ஊரை சேர்ந்தவர். 15 வருடங்களுக்கு முன்பு அ.சா.1 கலைவாணிக்கும் , அவருடைய கணவர் மற்றும் குடும்பத்தாருடன் தகராறு ஏற்பட்டு அரக்கோணம் காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தார். இந்த வழக்கை பற்றி எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் கோரிக்கை செய்யப்பட்டு பரிசீலனை செய்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

**குறுக்கு விசாரணை அரசு தரப்பில்–**

2. 29.04.2009ம் தேதி அ.சா.1 கலைவாணிக்கும், 1ம் எதிரிக்கும் கிருஷ்துவ முறைபடி பெரியோர்களால் 17 1/2 சவரன் நகைகள், சீர்வரிசைகள், இருசக்கர வாசனம் அளித்து அரக்கோணத்தில் உள்ள சர்ஜ்யில் திருமணம் நடைபெற்றது. திருமணமான சில மாதங்களிலேயே 1ம் எதிரியும், அவரது வீட்டாரும் கலைவாணியை அசிங்கமாக பேசி, வரதட்சனை கேட்டு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. பிறகு 1ம் எதிரி மற்றும் அவருடைய குடும்பத்தாரான 2 முதல் 4 எதிரிகள் மீது 2017ம் வருடம் அ.சா.1 கலைவாணி அரக்கோணம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில்

வரதட்சனை கேட்டு கொடுமை படுத்துவதாக எதிரிகள் மீது புகார் அளித்தார் என்றால் சரியல்ல.

3. போலீஸ் விசாரணையில் எதிரிகள் அ.சா.1 கலைவாணியை அசிங்கமாக பேசி, வரதட்சனை கேட்டு கொடுமை செய்து கொலை மிரட்டல் விடுத்ததாக சாட்சியம் அளித்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக எதிரிகளை வழக்கில் இருந்து விடுவிக்க எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4. புகார்தாரருக்கும், எதிரிக்கும் நடைபெற்ற திருமணம் பற்றியோ, இவ்வழக்கு பற்றியோ எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். புகார்தாரர் தற்போது எங்கு இருக்கிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவருக்கு 2 வது திருமணம் நடைபெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் அழைத்ததின் பேரில் தான் சாட்சியம் அளிக்கவந்துள்ளேன் என்றால் சரிதான். புகார் கொடுத்த பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் எந்த ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரிதான்.

மறு விசாரணை – இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I(FAC)
Arakkonam.